சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

புசா.01 திரு. பழனி த /பெ திரு. அம்மாவாசை , வயது 45

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை .–**

. 01. நான் ஆறுமுகம் என்பவரிடம் சுமார் 15 ஆண்டுகளாக பணியாற்றி வருகிறேன். ஆறுமுகம் என்பவரிடம் என்ன வேலை செய்கிறேன் என்றால் நான் காண்ட்ராக்டர் வேலை செய்கிறேன். நான் தனிப்பட்ட முறையில் காண்ட்ராக்ட் எடுத்து வேலை செய்கிறேனா என்றால் கடந்த நான்கு ஆண்டுகளாக நான் தனிப்பட்ட முறையில் செய்கிறேன் அதற்கு முன்பு ஆறுமுகம் என்பவரிடம் வேலை செய்து வந்தேன். நான் ஒப்பந்ததாரராக இருப்பதற்கு உரிமம் எடுத்துள்ளேன். நான் ஒப்பந்ததாரராக இருப்பதால் எனது பண பரிவர்த்தனைகள் அனைத்தும் வங்கி மூலமாகத்தான் இருக்கும் என்றால் சரிதான். இந்த வழக்கு எதிரி எங்கள் பகுதியை சார்ந்தவர் அல்ல என்றால் சரிதான். எதிரி என்னுடன் படித்த நபர் அல்ல என்றால் சரிதான். எதிரி எனக்கு எவ்வாறு பழக்கம் என்றால் என் மாமா ஆறுமுகம் என்பவர் ஒப்பந்ததாரராக வேலை செய்யும் போது எனக்கு சொந்தமான ஜேசிபி வாகனத்தை அங்கு வேலைக்கு எடுத்து செல்வேன் அப்போது எதிரி எனக்கு பழக்கமானார். நான் செய்த வேலைக்கு எதிரி தான் உரிமையாளர் என்றால் சரியல்ல நான் அரசாங்கம் மூலம் ஒப்பந்தம் எடுத்து வேலை செய்து வந்தேன். அதற்கு அருகாமையில் கல்லூரி இருந்தது. வாகனத்தை அந்த கல்லூரியில் நிறுத்துவோம். எத்தனை நாட்கள் அங்கு வேலை செய்தோம் என்றால் சுமார் மூன்று மாதம் வேலை செய்தோம். அந்த மூன்று மாதங்களில் வேலை செய்த வாகனங்களை கல்லூரியில் நிறுத்தும் போது எனக்கும் எதிரிக்கும் பழக்கம் ஏற்பட்டது என்றால் ஆறுமுகம் மூலம் பழக்கம் ஏற்பட்டது. எதிரி எனக்கு நண்பர் அல்ல என்றால் என் மாமா ஆறுமுகம் மூலம் அவர் எனக்கு நண்பர் அவர்.

02. எதிரி என்னுடன் எங்காவது வெளியே சென்று உள்ளாரா என்றால் இல்லை எதிரி என்னுடன் உணவு அருந்து வந்துள்ளாரா என்றால் இல்லை பின்பு எதன் அடிப்படையில் எதிரி என் நண்பர் என்றால் வேலை பார்த்த நேரத்தில் அவர் பழக்கமானதால் அவர் என் நண்பர் அவர். இந்த காசோலை

வழக்கு பரிவர்த்தனைக்கு முன்பு எனக்கும் எதிரிக்கும் வேறு பண பரிவர்த்தனைகள் இருந்ததா என்றால் இல்லை. எதிரி என் வங்கி கணக்கிற்கு எத்தனை முறை பணம் அனுப்பி உள்ளார் என்றால் என் வங்கி கணக்கிற்கு பணம் ஏதும் அனுப்பவில்லை. எதிரிக்கு நான் ரூபாய் பத்து லட்சம் கொடுத்தேன். என்ன காரணத்திற்காக பணம் தேவைப்படுகிறது என்று எதிரி கூறினாரா என்றால் நர்சரி கோர்ஸ் அபிவிறுத்திற்காக தேவைப்படுகிறது என்று கூறினார். நர்சரி கோர்ஸ் வந்து விட்டதா என்றால் அதன் பின்பு நான் செல்லவில்லை. எதிரிக்கு பணத்தை ரொக்கமாக கொடுத்தேனா அல்லது வங்கி மூலம் அனுப்பினேனா என்றால் ரொக்கமாக கொடுத்தேன். பொதுவாக ரூபாய் 20 ஆயிரத்திற்கு மேல் ஒரு நபருக்கு பணத்தை கொடுக்க வேண்டும் என்றால் வங்கி மூலமாக தான் அனுப்ப வேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

03. நான் வங்கி கணக்கு தொடங்கியதிலிருந்து ஒருபோதும் எனது வங்கிக் கணக்கில் ரூபாய் பத்து லட்சம் வைப்பு வைத்ததில்லை என்றால் சரியல்ல. நான் தனியாக 2023 ஆம் ஆண்டில் இருந்து ஒப்பந்தம் எடுத்து வேலை செய்து வருவதால் பணம் என்னிடம் இருக்கும் அதற்கு முன்பு என் வங்கி கணக்கில் 10 லட்சம் எப்போதும் இருந்ததில்லை என்றால் சரியல்ல என் வங்கி கணக்கில் இருந்துள்ளது. நான் வருமான வரி செலுத்துகிறேன் என்றால் கடந்த நான்கு ஆண்டுகளாக செலுத்தி வருகிறேன். 2023 க்கு முன்பு நான் வருமான வரி செலுத்தவில்லை என்றால் சரிதான். எதிரிக்கு நான் பணம் கொடுத்த சமயத்தில் பணத்திற்கு ஈடாக ஆவணம் ஏதேனும் எழுதி வாங்கினேன் என்றால் இல்லை. நான் பணம் கொடுத்ததற்கு ஆதாரமாக எவ்வித ஆவணமும் இல்லை என்றால் சரிதான். ரூபாய் 10 லட்சம் வருமானம் வந்ததற்கு நான் கணக்கு காட்ட வில்லை என்றால் சரிதான். ஆனால் என் அக்கா மூலமாக வந்த பணம் என்பதால் அவர் கணக்கு காட்டி உள்ளார். எதிரிக்கு ரூபாய் பத்து லட்சம் கடன் கொடுத்ததாக என் அக்காவின் கணக்கில் காண்பித்துள்ளேனா என்றால் இல்லை.

04. எதிரிக்கு கொடுத்த 10 லட்சம் என் அக்காவிடம் இருந்து வந்த வருமானம் என்று நான் முதல் விசாரணையிலும் சத்திய பிரமாண வாக்குமூலத்திலும் சட்ட அறிவிப்பிலும் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். நான் என் வழக்கறிஞர் மூலம் அனுப்பி சட்ட அறிவிப்பிற்கு எதிரி அனுப்பிய பதில் அறிவிப்பை படித்து பார்த்தேன் என்றால் சரிதான். அந்த பதில் அறிவிப்பில் எதிரி பணத்தை தர முடியாது என்று கூறியிருந்தார். எதிரி அனுப்பிய பதில் அறிவிப்பில் எதிரிக்கும் எனக்கும் சம்பந்தமில்லை என்றும் எதிரி ஒருபோதும் என்னிடம் பணம் பெற்றது இல்லை என்றும்

காசோலை கொடுக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார் என்றால் சரிதான். ஆனால் அது தவறாக தெரிவித்துள்ளார். நான் ஆறுமுகம் என்பவரிடம் வேலை செய்வதாகவும் நான் ஆறுமுகம் என்பவரின் பினாமி என்றும் எதிரி பதிலறிப்பில் தெரிவித்துள்ளாரா என்றால் சரியல்ல. ஆறுமுகம் என்பவர் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளார் என்றால் சரிதான்.

05. அவரிடம் எதிரி கடன் வாங்கியதாக அவர் ஒரு காசோலை வழக்கு தொடுத்துள்ளார் என்றால் சரிதான். எதிரிக்கும் ஆறுமுகத்திற்கும் எவ்வளவு ஆண்டுகளாக கொடுக்கல் வாங்கல் உள்ளது என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது ஆனால் 15 ஆண்டுகளாக எனக்கும் எதிரிக்கும் பழக்கம் உண்டு அதற்கு முன்பு எதிரிக்கும் ஆறுமுகத்திற்கும் பழக்கம் உண்டா என்று எனக்கு தெரியாது. நான் தொடுத்த காசோலை வழக்கும் ஆறுமுகம் தொடுத்த காசோலை வழக்கும் பொதுவாக ஒரே நாளில் தான் வாய்தா வரும் என்றாலும் நானும் ஆறுமுகம் என்பவரும் ஒன்றாகத்தான் நீதிமன்றத்திற்கு வந்து செல்வோம் என்றாலும் சரிதான். எதிரிக்கும் ஆறுமுகம் என்பவருக்கும் கொடுக்கல் வாங்கல் இருந்த காலத்தில் அதற்கு ஈடாக எதிரி கொடுத்து வைத்திருந்த காசோலைகளை நான் தவறாக பயன்படுத்தி மோசடியாக இவ்வழக்கு தொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி கொடுத்த காசோலையானது நந்தனம் பாலிடெக்னிக் உடைய காசோலை என்றால் சரிதான். நான் தனிப்பட்ட நபருக்கு பணம் கொடுக்காமல் நந்தனம் பாலிடெக்னிக் இருக்கு பணம் கொடுத்ததால் நான் வங்கி பரிமாற்றம் மூலம் பணத்தை அனுப்பினேனா என்றால் இல்லை ரொக்கமாக தான் கொடுத்தேன். இந்த வழக்கு காசோலை அடங்கிய காசோலை புத்தகத்தை பல ஆண்டுகளுக்கு முன்பு எதிரி பெற்றார் என்றார் என்றாலும். அதன் பின்னிட்டு பல காசோலை புத்தகங்களை எதிர பயன் படுத்தி விட்டார் என்றாலும், எனவே இந்த வழக்கு காசோலையானது தற்போது தற்போது கொடுக்கப்பட்ட காசோலை அல்ல என்றால் சரியல்ல.

06. எதிரி நடத்திவரும் கல்லூரி ஆனது பல நூறு கோடி ரூபாய் மதிப்புள்ள கல்லூரி என்றால் சரிதான். கல்லூரியை தவிர எதிரிக்கு அசையும் அசையா சொத்துக்கள் 100 கோடி ரூபாய்க்கு மேல் இருக்கும் என்றால் சரிதான். அவ்வளவு பணம் வைத்துள்ள ஒரு நபர் என்னிடம் ரூபாய் பத்து லட்சம் கடன் வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. ஆறுமுகம் என்பவரிடம் எதிரி கொடுத்த காசோலையை வைத்து இந்த வழக்கு தொடுத்துள்ளதால் தான் எதிரிக்கு பணம் கொடுத்ததற்கு ஆதாரமாக ஆவணங்கள் என்னால் தாக்கல் செய்ய இயலவில்லை என்றால் சரியல்ல.
எதிரிக்கு கொடுத்த ரூபாய் 10 லட்சம் ஆனது என் அக்கா என்னிடம்

கொடுத்த பணம் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான் ஆனால் அவரிடம் நான் சப் காண்ட்ராக்டராக வேலை செய்ததற்கு ஊதியமாக அவர் கொடுத்த பணத்தை தான் எதிரிக்கு கொடுத்தேன்.

07. எனவே அது என்னுடைய பணம் தான். அவ்வாறு சப் கான்ட்ராக்ட் எடுத்ததன் மூலமாகத்தான் நான் வருமானத்தை ஈட்டினேன் என்ற விவரத்தை வருமான வரி கணக்கில் காண்பித்து உள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு நான் வருமான வரி கணக்கு 2023 இல் இருந்து தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான் அதற்கு முன்பு வரை நான் ஈட்டி வருமானத்தில் 18 சதவீதம் வருமான வரியாக பிடித்து விட்டு மீதம் உள்ள பணம் தான் எனக்கு கொடுப்பார்கள். என் அக்கா உரிமம் பெற்ற ஒப்பந்ததாரர் என்பதால் அவர் வீட்டு வருமானத்திற்கு 18 சதவீதம் வருமானவரி பிடித்தம் செய்து மீத பணத்தை கொடுப்பார்கள் என்பதால் நான் சப் கான்ட்ராக அதில் பணியாற்றி வருமானம் ஈட்டுவதற்கு தனிப்பட்ட முறையில் வருமான வரி செலுத்தி உள்ளான என்றால் என்ன அக்காவை 18 சதவீதம் செலுத்தியுள்ளார். என் அக்காவிடம் இருந்து எனக்கு வரும் வருமானமானது வங்கி கணக்கு மூலமாக வருமா என்றால் வங்கி கணக்கு மூலமாக வரும் ரொக்கமாகவும் வரும். எந்த தேதியில் எதிரிக்கு ரூபாய் 10 லட்சம் பணம் கொடுத்ததாக நான் குறிப்பிட்டு புகாரிலும் சட்ட அறிவிப்பிலும் முதல் விசாரணையிலும் தெரிவிக்கவில்லை என்றால் 06.02.2021 அன்று கொடுத்தேன். 06.02.2021 அன்று என்னிடம் ரூபாய் 10 லட்சம் பணம் இருந்ததற்கு ஆதாரமாக ஆவணங்களினால் தாக்கல் செய்ய இயலுமா என்றால் இயலாது.

08. எதிரிக்கு ரூபாய் பத்து லட்சம் பணம் கொடுக்கும் அளவிற்கு எனக்கு போதிய வருமானம் இல்லை என்றாலும் வசதியும் இல்லை என்றாலும் சரியல்ல. எதிரி எனக்கு காசோலை கொடுத்ததற்கு ஆதாரமாக ஏதேனும் உள்ளதா என்றால் எதிரி தான் காசோலை கொடுத்தார் யார் முன்னிலையில் எதிரி காசோலையை கொடுத்தார் என்றால் ஆறுமுகம் முன்பு வைத்து கொடுத்தார். நான் ஆறுமுகம் என்பவரை முன்னிலையில் வைத்து தான் எதிரிக்கு பணம் கொடுத்தேன். ஆறுமுகம் முன்னிலையில் தான் நான் எதிரிக்கு பணம் கொடுத்ததாகவும் ஆறுமுகம் முன்னிலையில் தான் எதிரி எனக்கு காசு இல்லை கொடுத்ததாகவும் புகாரிலும் சட்ட அறிவிப்பிலும் முதல் விசாரணையும் நான் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். எதிரி என்னிடம் எந்த காலத்திலும் கடன் ஏதும் பெறவில்லை என்றாலும் எதிரி எனக்கு எந்த காசோலையும் கொடுக்கவில்லை என்றாலும் சரி அல்ல. நான் ஆறுமுகம் என்பவரிடம் சேர்ந்து கொண்டு எதிரி ஆறுமுகத்திடம் கொடுத்த பழைய

**காசோலைகளை வைத்து மோசடியாக இந்த வழக்கு தொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எனவே நான் தாக்கல் இந்த வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியில்லை.**

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

KODHAVADI SUBRAMANIAN DINESH

Digitally signed by KODHAVADI SUBRAMANIAN DINESH
Date: 2026.01.22 10:01:57 +0530

Judicial Magistrate No.1,
Tirupathur.